யூனியன் கல்லூரி - தெல்லிப்பழை
பழைய மாணவர் சங்கம் - ஐ.இ.

# 'தங்கத் தாரகை'

பாடசாலையின் 200 ஆண்டுகால வரலாற்று நூல்



## வெளியீட்டு விழா

லண்டன் - 27.10.2018


லூசியத்தில் தரமான நகைக்கடை
Thinesh
Jewellers & Textiles
276, Lewisham High Street
Lewisham London SE 13, 6JZ
Tel : 020 8613 9569
Fax : 020-8690-4661
e-mail: t-k6@hotmail.co.uk
web: www.thinesh-jt.com

யூனியன் கல்லூரி – தெல்லிப்பழை
பழைய மாணவர் சங்கம் - ஐஇ


# கல்லூரியின் 200 ஆண்டுகால வரலாற்று நூல்




# வெளியீட்டு விழா

27. 10. 2018 சனிக்கிழமை மாலை 6.30 மணி

லூயிசம் சிவன் மண்டபம், **4A Clarendon Rise, London SE13 5ES**


TRUST MONEY EXCHANGE
EXPRESS SERVICE & BEST RATE
in South East London for
Sri Lanka, India, Europe and CANADA.
Inside AJ
Tel: 0208 694 6653 | Fax: 0208 694 6653
Mob: 078 0077 3330
e-mail: trustmoneyexchange@live.co.uk
MRL No: 12630546
AJ FOOD
10 Loampit Hill
Lewisham
London
SE13 7SW
AJ Video Audio
Next door
14 Loampit Hill, Lewisham, London, E13 7SW.
Tel: 020-8691-8888
DVD

# Editorial

## யூனியன் தாயின் வரலாற்றின் வரலாறை அற்புதமாகக் கொண்டாடுவோம்!

எமது வாழ்வின் வசந்தத்தை உருவாக்கிய 'யூனியன் அன்னையின்' 200 வருட நிறைவுக் கொண்டாட்டங்கள் தெல்லிப்பழையில் அமைந்துள்ள யூனியன் கல்லூரி வளாகத்தில் 2016 ஒக்ரோபர் மாதம் மிகப் பிரமாண்டமானதாக நடைபெற்றது. அந்த வரலாற்று நிகழ்ச்சியில் இங்கிலாந்திலிருந்து சென்று நாங்கள் கலந்து கொண்ட நினைவுகள் பசுமையானவை.

2004ம் ஆண்டு எப்பிரல் மாதம் 24ம் திகதி முன்னாள் அதிபர் ஐ பி துரைரத்தினம் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஒட்டி ஒரு சிறப்பு மலரினை இங்கு வெளியிட்டோம். இங்கே நடந்த 'மலரும் மொட்டுகள்' கலை நிகழ்ச்சியில் அன்றைய கல்லூரி அதிபர் திரு புண்ணியசீலன் முன்னிலையில் இந்த மலர் வெளியிடப்பட்டது. 1816இல் தொடங்கி நடைபெற்று வந்த அமெரிக்க மிசன் பாடசாலையையும் பின்னர் தொடங்கி நடந்த இருமொழிப் பாடசாலையையும் 1939இல் இணைத்து 'நவீன யூனியன் கல்லூரியை' உருவாக்கியவர் அமரர் ஐ பி துரைரத்தினம் அவர்களே.

இருநூறு ஆண்டுக் கொண்டாட்டங்களுக்கு முன்னதாகவே கல்லூரியின் வரலாற்றை முழுமையாகப் பதியவேண்டும் என்கிற எண்ணம் எம்மில் பலரிடம் இருந்து வந்தது. இதற்கான ஆரம்பக்கட்ட வேலையும் தகவல் தேடல்களும் இடம்பெற்றன.

அவுஸ்திரேலியா – மெல்பேர்ணில் வதியும் எழுத்தாளர் முருகபூபதியை தொடர்பு கொண்டு சில விடயங்கள் - ஆசிரியர், கவிஞர் அம்பிகைபாகன் பற்றிய கட்டுரையும் பழைய மாணவர் மாவை நித்தி - பற்றிய கட்டுரையும் பெறப்பட்டன. கல்லூரியின் வரலாற்றுப் பதிவு வேலை-களை திரு பாலசுந்தரம் அவர்கள் தொடங்கியுள்ளதாக அறிந்த வேளையில் இந்தத் தரவுகள் அவரிடம் தரப்பட்டன.

கல்லூரியின் 200 ஆண்டுகால வரலாறு ஒரு சிறப்பு மலராக இல்லாமல் ஒரு வரலாற்று நூலாக இன்று வெளியிடப்படுகின்றது. ஒரு எழுத்தாளனாக, வரலாற்று ஆசிரியனாக, இவற்றுக்கு மேலாக எமது அன்னையின் சிறந்த அதிபராக ஒரு தசாப்தம் கடமையாற்றிய திரு கதிர் பாலசுந்தரம் அவர்களின் எழுத்தின் பெறுமதி இன்று 'தங்கத் தாரகை' என்கிற வரலாற்றுப் பொக்கிசமாக உங்கள் கரங்களில் தவழுகிறது. இந்த வரலாற்று நிகழ்ச்சியையும் பதிவு செய்வதே இந்தச் சிறு மலரின் நோக்கமாகும். அதிபர் திரு கதிர் பாலசுந்தரம் அவர்களின் இந்த ஆவணத்தின் தயாரிப்பினோடு தொர்புடைய கதையும் எழுத்தாளர் லெ முருகபூபதி அவர்களின் நீண்ட கட்டுரையும் இங்கே பதியப்பட்டுள்ளன.

இந்த வேளையில் அதிபர் கதிர் பாலசுந்தரம் அவர்களை நன்றியுடன் நினைவு கொள்வோம். இலங்கைத் தமிழ் மக்களின் கல்வி மேம்பாட்டின் ஆரம்பப் புள்ளிகளில் குறிப்பிடத்தக்க 'யூனியன் கல்லூரியோடும் தெல்லிப்பழைக் கிராமத்தோடும் தொடர்புடைய நாமனைவரும் பெருமையுடன் 'யூனியன் அன்னையின்' சரித்திரத்தைப் பேணுவோம்.

**Editors:**
*Jeya Srigengatharan*
*Sornadevi Thambipilai*

**Printers:**
*Setline Data Ltd*


THARANI
JEWELLERY
அதி குறைந்த வட்டி
வீதத்தில் அடைவு பிடிக்கும்
தலை சிறந்த நிறுவனம்
Our Rates of Interest
2.95%
Loan Term: Up to 6 Months
Documents Required: • Photo ID - Passport or
• UK Driving License • Proof of Address - Any Utility
Bill or Bank Statement not Older than 3 Months
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ
Tel: 020 8902 7111
020 8902 6777
ashni23@aol.com

# The Unions

*Old Students Association of Union College (UK)*
**Tellippalai, Sri Lanka**
**theunions.org.uk**
**26 Bromyard Avenue, London W3 7AU**

## MESSAGE FROM OUR PRESIDENT...........



On behalf of the Unions, I am delighted to welcome you to the book launch of 'Thanga Tharakai'/ Golden Star, the first of it's kind for us.

Union College, one of the oldest schools in the country, reached a huge milestone of bicentenary in October 2016. The celebrations were unique and colourful with many old students, teachers and well wishers joining the Principal, Staff and students in a befitting manner. The Hon. Minister for Finance graced the occasion

This project was conceived as part of our bicentenary celebrations, and has been a huge commitment by one of our distinguished members, Principal Emeritus, Mr Kathir Balasundaram. The book covers the 200-year history and important events of Union College and, I believe, can be considered the definitive work on our school. It is a remarkable achievement.

This publication was successfully launched by our sister OSAs in Australia, Norway, Canada and Jaffna, with widespread praise. The entire proceeds from the sale of this book worldwide will be held in a special Balasundaram trust fund, and used exclusively to improve the standard of education by way of scholarships, prizes and similar measures.

We salute Mr Balasundaram for his dedication, effort and perseverance and thank him wholeheartedly for his commitment to our cause. We invite you to support us by purchasing a copy of this special and unique book, which will enable us to continue helping our students to fulfil their potential.

We wish you a pleasant evening!

Sornadevi Thambipillai (Mrs)

SKC

Estd. 1992

# SRIKANTH & CO.

## SOLICITORS

We practice in the following areas of law:

- CONSUMER PROBLEMS
- CONVEYANCING – RESIDENTIAL
- CONVEYANCING – COMMERCIAL
- EMPLOYMENT LAW
- HOUSING MATTERS
- IMMIGRATION
- LANDLORD & TENANT
- LICENSING – COMMERCIAL PREMISES
- LITIGATION – CIVIL & COMMERCIAL
- MATRIMONIAL & FAMILY LAW
- WELFARE MATTERS
- WILLS & PROBATE

Authorised and regulated by the Solicitors Regulation Authority
(SRA No: 564285)

**557 HIGH ROAD, WEMBLEY, MIDDLESEX, HA0 2DW**

TEL: **020 8795 0648** FAX: **020 8795 0649** MOB: **07831195979**

EMAIL: **info@srikanthsolicitors.co.uk**

WEBSITE: **www.srikanthsolicitors.co.uk**

THE LAW SOCIETY • ACCREDITED

Conveyancing Quality

யா / யூனியன் கல்லூரி தெல்லிப்பளை
යා/යූනියන් විද්‍යාලය තෙල්ලිප්පලේ
J/UNION COLLEGE TELLIPPALAI
Web : www.unioncollege.lk E-mail : unioncollegete@gmail.com

My No J/Tell/U/ Your No. Date 10-10-18

## Message from College Principal

Respectable Coordinator, President and Secretary of London OSA of Union College, Very good morning to you all!

I have great pleasure to forward this message to the magazine "Golden Star" which is to be published by Old Students' Association, London. The school community is proud of this book release containing the longest college history since 1816. At the same time we would like to stretch our grateful thanks to those who have contributed immensely to compile this vast history into a book.

It is well know that our respectable former retired principal Mr. KathirBalasundram and his Son Mr. B. Yalkowan have contributed their hardship to launch this book.

I would like to thank and congratulate to all old Students in London for their valuable contribution for the book releasing and grace the program today.

Once again I would like to thank for the contribution towards to college in past and present and we are looking forward your volubale contribution in future too.

..................
Mr.T.Varathan
Principal
J/Union College

T.VARATHAN
Principal (SLPS - I)
J/Vali/Union College
Tellippalai

Principal [illegible] Office [illegible] Fax [illegible]

# கல்லூரிக் கீதம்

இராகம்: ஆனந்தபைரவி தாளம்: ஆதி

பல்லவி

வாழ்த்தி வணங்கி மகிழ்வோம் - உவந்துதலை
தாழ்த்தி பணிந்து தொழுவோம் - யூனியன் தாயை – வாழ்த்தி

அநுபல்லவி

தெல்லி மணிநகர்க்கோர் திலகமெனத் திகழ்ந்தே
செல்வங் கொளிக்குங் கலைக்கோயிற் பணிபுரிந்து – வாழ்த்தி

சரணங்கள்

ஆதி பகவன் வழி அறிவுச் சுடர்விரித்தே
நீதிநெறியில் நெஞ்சநிறைவுக் கருளளித்திது
சாதி சமய இன சமரச ஞான மொளிர்
சோதிச் சுடரீலீசன் கருதிப் பொருளுணர்ந்தே - வாழ்த்தி

வாழ்வுக் கிலக்கியமாய் வளர்ச்சிக் கிலக்கணமாய்
ஆழ்கடலுக்குயிரை அர்ப்பணித் திங்குயிர்த்தே
சூழிருள் கொய்தேயன்று சுடரொழி ஏற்றவந்த
ஊழிய ருள்ளமென உயர்ந்தன்னை வாழ்கவென்றே - வாழ்த்தி

அன்பின் வழியறிந்தும் அறனின் திறமுணர்ந்தும்
பண்பின் பயனறிந்தும் பாலித் தளித்து நின்றே
இன்ப நினைவலைகள் இதயத் தொலிப்பவென்று
நண்புக் கினிய தாயை நாடி யணைந்து நின்றே - வாழ்த்தி

ஆக்கியோன்: கவிஞர் அம்பிகைபாகன்

கனடாவில் இடம்பெற்ற 'தங்கத் தாரகை' வெளியீட்டு விழாவின் காட்சிகள்






அவுஸ்திரேலியா - மெல்பேர்ண் 'தங்கத் தாரகை' வெளியீட்டு விழாவில் முன்னாள் ஆசிரியர், கவிஞர் அம்பிகைபாகனுக்கு நூலின் பிரதியை வழங்கும் காட்சி



நோர்வேயில் நடைபெற்ற 'தங்கத் தாரகை' வெளியீட்டு விழாவின் காட்சி



# தடைகள் பல தாண்டி வந்த 'தங்கத் தாரகை'யின் நீள் கதை

*கதிர் பாலசுந்தரம்*



'காஞ்சி' என்று செல்லமாக அழைக்கப்படும் லண்டன் பழைய மாணவர் சங்கத் தலைவி திருமதி சொர்ணதேவி தம்பிப்பிள்ளை அவர்கள், நான் 'தங்கத் தாரகை' வரலாற்று நூலை எழுத என்ன காரணம்? எதிர்கொண்ட இடர்கள் என்ன? என்னும் பொருள்கொண்ட கட்டுரை வழங்கும்படி வேண்டிக்கொண்டதன் பேரில் இந்த ஆக்கம் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

தரணி எங்கும் பரணி பாடி ஊர்வலம் வரும் திருமகள் யூனியன் மாதாவின் செம்மண் புண்ணிய பூமியில் ஒன்றரைச் சதாப்தங்கள் ஆசிரியனாகவும், உதவி அதிபராகவும், அதிபராகவும் பணியாற்றிய என் ரணத்தோடும் சதையோடும் உணர்வோடும் உயிரோடும் ஒன்றிவிட்ட புனித நிறுவனம் யூனியன் கல்லூரி. மாத முடிவு வேதனத்தை எதிர் பார்த்து காலையில் ஓடிச்சென்று கை-யெழுத்திட்டு மாலை மணி அடித்ததும் பாடசாலையை விட்டு ஓட்டமாக வீட்டுக்குத் திரும்பி ஓடி மறைந்தவன் அல்ல நான். சனி ஞாயிறு விடுதை-லக் காலங்களிலுங்கூட யூனியன் திருப்பூமியில் பயபக்தியோடு பணிபுரிந்த யூனியன் மாதாவின் உத்தம சேவகன். ஓய்வின் பின்னரும் யூனியன் அன்னை என் இதயத்தில் நித்திய வாசஞ்செய்தாள். யூனியன் மாதாவின் வரலாறு ஏராளம் திரிபுகளுடன் அரைகுறைப் பதிவுகளில் ஆட்சி புரிந்தன. அதுவே, நான் யூனியன் வரலாற்றை எழுதும் முயற்சியை மேற்கொள்ளக் காரணம்.

## தவறான வரலாற்றுப் பதிவுகள்



யூனியன் கல்லூரி வரலாற்றை திரிவுபடுத்தும் எத்தனங்கள் சிலுப்பிய முள்ளம் பன்றியின் கூரிய முட்கள் படையாக வந்து இதயத்தில் குத்துவது போல உணர்ந்தேன். நகரத்து யாழ் மத்திய கல்லூரிதான் குடாநாட்டின் முதலாவது ஆங்கில பாடசாலை என்ற கருத்து எங்கும் ஆட்சேபனையின்றி தலைநிமிர்ந்து நிலவியது. யூனியன் வளாகத்தினுள்ளுங்கூட அந்தக் கருத்து வேரூன்றி ஆட்சிபண்ணியது. யூனியன் 200 ஆவது ஆண்டுச் சிறப்பு மலரில் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் "*யாழ். மாவட்டத்தில் 200 ஆண்டு விழாக் கொண்டாடும் இரண்டாவது பாட-சாலை யூனியன்*" என்று பிழையாகப் பதிவு செய்துள்ளார். இணைய தளத்தில் வெளிவந்த சான்டர்ஸ் மண்டப பட முகப்பில் அமைந்த 1816 என்பது அழிக்கபட்டு 1884 என்று எழுதும் அளவுக்கு கிராமத்து கல்வி நிறுவனமான யூனியன் வரலாறு திரிவுபடுத்தலுக்கு இலக்காகியிருந்தது.

யாழ் மத்திய கல்லூரி 1817ஆம் ஆண்டுதான் ஆரம்பித்தது என்பதை வரலாற்று மூலாதாரங்களுடன் தங்கத் தாரகை நூலின் 18ஆம் பக்கத்தில் சொல்லப்படுகின்றது. அவர்களுடைய உவெஸ்லியன் மெதடிஸ்த மிசனின் சமூக வரலாறு என்னும் நூலிலேயே 1817ஆம் ஆண்டிலேதான் யாழ் மத்திய கல்லூரி ஆரம்பித்ததாகப் பதிவு உள்ளதைச் சுட்டிக் காட்டியுள்ளேன்.

கல்லூரி அதிபர்கள் எண்ணிக்கை பற்றிய தவறான பதிவுகளை திருத்தஞ் செய்யவும் இந்த முயற்சி முன் எடுக்கப்பட்டது. அமெரிக்க அதிபர்கள் நால்வர் என்பதே வழமையில் பாவனையில் இருந்தது. அது தவறு **9** அமெ-ரிக்க அதிபர்கள் என்பது 'தங்கத் தாரகையில்' பதிவாகின்றது. தலைமை ஆசிரியர்கள் **6** பேர். அவர்களது பெயர் பேசப்படாமலிருந்தது. அத்தோடு 'செல்லப்பா ஆங்கில பாடசாலை' அதிபர்கள் **5** கணக்கில் எடுக்காத


நிலை நிலவியது. மிசன் பாடசாலையின் திரு. ஐ.பி. துரைரத்தினம் அவர்கள் தொடக்கம் இற்றைவரை 10 அதிபர்கள். மொத்தமாக 30 அதிபர்கள் யூனியன் சிங்காசனத்திலிருந்து ஆட்சி புரிந்துள்ளனர்.

இன்னும் புகழ்பூத்த யூனியன் கல்லூரியில் அதன் ஓய்வு பெற்ற அதிபர்களின் படங்கள் பேணப்படவில்லை. **அந்தக் குறையை நிவர்த்தி செய்யவும் தங்கத் தாரகை பயன்படுத்தப்பட்டுள்ளது.**

**புகழ்மிகு முதன்மைகள்**

எனது 15 ஆண்டு கால யூனியன் வாழ்வில் யூனியன் கல்லூரியின் பிரமிப்பூட்டும் ஈடில்லாப் பெருமைகள் முதன்மைகள் மறைக்கப்படுவதையும் மங்கி மறைந்துகொண்டிருப்பதையும் கண்டு மனதுள் வெந்து வெடித்திருக்கின்றேன். அவற்றைப் பதிவில் வைப்பதன் மூலமே அதன் பெருமைகளை சிரஞ்சீவியத்துவம் பெற வைக்கமுடியும் என்ற கருத்து நீண்ட காலம் எனது உள்ளத்தில் வேர்விட்டு வளர்ந்துகொண்டிருந்தது.

முதலாவது கலவன் பாடசாலை, முதலாவது விடுதிப் பாடசாலை, நலிந்த மக்களுக்கு முதலாவதாக கல்வி உரிமை வழங்கிய பாடசாலை, அவர்களுக்கு முதலாவதாக சம ஆசனம் வழங்கிய பாடசாலை, மத்தியதர வகுப்புத் தோற்றத்துக்குக் காரணமான ஆங்கிலத்தை யாழ் குடாநாட்டுக்கு அறிமுகஞ்செய்த முதலாவது ஆங்கிலப் பாடசாலை, ஆழிசூழ் உலகம் முழுவதிலும் முதலாவது தமிழ் பத்திரிகையான உதயதாரகையை வெளியிட்ட பாடசாலை என்று யூனியனின் புகழும் பெருமையும் பிரமிக்க வைக்கிறது. அவற்றை வரலாற்றில் பதித்துப் பேணிப் பாதுகாக்க 'தங்கத் தாரகை' எழுகை கொண்டது.


உதயதாரகை. MORNING STAR.

## சிக்கல் மிகுந்த யூனியன் வரலாறு

யூனியன் கல்லூரியின் வலாற்றை எழுதும் முயற்சிக்கு நான் 2006 ஆம் ஆண்டில் அத்திபாரம் இட்டிருந்தேன் என்று சொல்லலாம். அந்த ஆண்டில் யூனியன் மாதாவின் நிர்வாக கால அட்டவணை ஒன்றை – Timeline - கூகிள்ஸ் இணைய தளத்தில் பதிவு செய்திருந்தேன். அது பூரணத்துவமானதாக இருக்கவில்லை. அதன் முந்திய வருடத்தில் கனடா பழைய மாணவர்' சங்கம் எனது 'பொற்காலம் நினைவுகள் பதிவுகள்' எனும் ஞாபகக் குறிப்பு நூலை வெளியிட்டிருந்தது. அந்த நூல் யூனியனின் ஒரு தசாப்த கால நிர்வாக வரலாற்றைத் துல்லியமாகப் பிரதிபலிப்பதைக் கண்டேன். அந்த முயற்சி தங்கத் தாரகை முயற்சியை மேற்கொள்ள உற்சாகம் தந்தது. புதுப்பித்த கால அட்டவணையை – Timeline – அடியொற்றியே தங்கத் தாரகை வரலாறு நகர்கின்றது.

தங்கத் தாரகை நூலை நான் யூனியனின் 200 ஆண்டு நிறைவுக்கு முன்னதாகவே எழுத ஆரம்பித்திருந்தேன். அதிபர்களை மையமாக வைத்து கட்டமைக்கபட்ட இந்த நூலை எழுதுவதற்குத் திரு. ஐ.பி. துரைரத்தினம் அவர்களது ஞாபகக்குறிப்பையும், மற்றும் எனது 'பொற்காலம்' ஞாபகக் குறிப்பையுந் தவிர வேறு அதிபர்களின் பதிவுகள் எதுவும் பதிவில் இருக்கவில்லை. எவரும் முன்வந்து தேடலுக்கு கைதருவதாகவும் இல்லை. உதாரணமாக கலாநிதிப் பட்டம் பெற்ற பழைய மாணவர் அட்டவணையை புதுப்பிக்க மின்அஞ்சல் மூலம் பலருக்குச் செய்தி அனுப்பினேன். ஒருவர்கூட உதவவில்லை. அதன் பின்னர் நான் தேடல் செய்து ஐவரின் பெயரை புதிதாக அந்த அட்டவணையில் சேர்த்தேன். ஆரம்பகால அமெரிக்க வெள்ளை அதிபர்கள் பற்றி எழுத நான் அமெரிக்காவில் பொஸ்ரன் மாநகரில் அமைந்த அமெரிக்க மிசன் நூல் நிலையத்தை நாடிச் சில செய்திகளையும் இரு படங்களையும் பெற்றேன். அவர்களாலும் எனது விசாரணைகளுக்குத் திருப்தியான பதில் தர முடியவில்லை. அதிபர்கள் திருவாளர்கள் என்.கந்தசாமி, பி.கமலநாதன், என்.புஸ்பநாதன் ஆகியோர் பற்றி எழுதப் பலரை நாடினேன். பலன் இல்லை. நானே தேடல் செய்து அவர்கள் பற்றி எழுதவேண்டியிருந்தது. இன்னும், இரு அதிபர்கள் பற்றி எழுத
பழைய மாணவர் ஒருவர் முன்வந்த பொழுதும் அவர் எழுத்தாளர் அல்லாத

காரணத்தால் இரண்டு அதிகாரத்தில் எழுதவேண்டியதை இரத்தினச் சுருக்கமாக எழுதியிருந்தார். ஒரு அதிகாரத்திற்கும் போதாமல் இருந்தது. அதற்கு நீண்ட முகவுரை, எழுதி ஒரு அதிகாரத்தில் வெளியிட வேண்டியிருந்தது. அதிபர் திரு எஸ். புண்ணியசீலன் அவர்கள் பற்றிய கலாநிதி ம.பிரவீனன் அவர்களது கட்டுரையும், மற்றும் எனது நிர்வாக காலம் பற்றிய எழுத்தாளர் திரு. கே.எஸ். சுதாகர் அவர்களது கட்டுரையும் வரலாற்றை முழுமையாகத் தந்து தங்கத் தாரகை வரலாற்றை பிரகாசப்படுத்தப் பெரிதும் உதவின.

## மூன்று வருட முயற்சி

யூனியன் பழைய மாணவர்கள் கைகளில் இன்று இராஜகம்பீரமாக வீற்றிருக்கும் 'தங்கத் தாரகை' வரலாற்று நூலை எழுத நீண்ட உழைப்பு நிறைந்த மூன்றாண்டுகள் தேவைப்பட்டன. 250 பக்கங்கள் வரை எழுதி முடிந்த கட்டத்தில், முதுமைக்கே வாலாயமான நோய் என்னை இறுகப்பற்றிக்கொண்டது. மூன்று தடவைகள் வைத்தியர்கள் தாதிகள் சுற்றி நின்று இறுதிப் பயணத்தைத் தள்ளிப்போட முயற்சித்த திகில்மிகு காட்சிகள் கண்முன் வந்து போகின்றன. ஒரு தடவை ஒரு தாதி, வேலை அலுவலகத்தில் இருந்த மகனுக்கு 'உடன் வரவும். நிலைமை மோசம்' என்று தகல் கொடுத்தார். இந்தச் சூழ்நிலையில் தொடர்ந்து எழுத முடியாமல் போய்விட்டது.

ஓராண்டுக்கு மேல் ஓடிமுடிந்துவிட்டது.

## நிறைவு செய்த பால யாழ்கோவன்

தகவல்கள் பல திரட்ட வேண்டியிருந்தன. செய்திகள் பல இன்னும் சொல்ல வேண்டியிருந்தன. படங்கள் இன்னும் சேகரிக்கப்படவில்லை. இந்தக் கட்டத்தில் மகன் பால யாழ்கோவன் படங்கள் திரட்டும் முயற்சியில் இறங்கினார். இரவு வேளை சதா தொலைபேசி மூலம் தொர்பாடல் செய்தும், இணைய தளங்களில் தேடல் செய்தும் படங்கள் திரட்டும் பணியில் ஈடுபடத் தொடங்கினார். கிடைத்த படங்கள் பலவும் தரமானவையாக இருக்கவில்லை. அவற்றைச் சீர்செய்ய நீண்ட ஊழியம் தேவைப்பட்டது.

அதிபர்களது படம் திரட்டும் முயற்சியில் பல மாதக்கணக்காகப் பால யாழ்கோவன் ஈடுபட்டார். அமெரிக்காவில் உள்ள பொஸ்ரன் நகர அமெரிக்க மிசன் நூல் நிலைய அதிகாரிகளை அவரும் தொடர்புகொண்டு தேடல் செய்தார். அதிஸ்டவசமாக 9 அமெரிக்க அதிபர்களதும் படங்களை சேகரிக்க முடிந்தது. அவர்கள் படங்கள் தெளிவில்லாமலிருந்தன. சுதேச அதிபர்கள் பலரது படங்களும் தரமானதாக இருக்கவில்லை. அவை ஒரே சீராகத் தெளிவாக இருப்பதற்காகத் தமிழ் நாட்டிலும், ஆந்திர மாநிலத்திலும் உள்ள தலைசிறந்த ஓவியர்களான திரு. ஜீவானந்தம், திரு.ஹரிகிருஷ்ணா நடோஜா ஆகியோரின் சேவை மூலம் அதிபர்களின் படங்கள் கையால் வரைதல் செய்விக்கப்பட்டன. எனினும் 32 ஆண்டுகள் அதிபராய் அமைந்த
திரு. எஸ்.செல்லப்பா அவர்களின் படம் தேடலுக்கு எட்டவில்லை என்பது வலியை ஏற்படுத்துகின்றது.

மேலும் படங்கள் ஏராளம் தேவைப்பட்டன. ஓயாத உழைப்பின் பலனாக ஏறக்குறைய 400 படங்கள் வரை சேகரிக்கப்பட்டன. அவற்றில் பல தரமானதாய் இல்லை. அவற்றைச் சீராக்கும் முயற்சி இரவு முழுவதும் தொடர்ந்தது. நூலில் ஆங்காங்கு பல ஓட்டை ஒறுவாய்கள். அவற்றைச் சரி செய்ய நாளும் பொழுதும் தொலைபேசியில் தொடர்பாடல் செய்து கட்டுரைகள் செய்திகள் தரவுகள் பெறப்பட்டன.


நூல் எழுதி முடிந்த பின்னர், பெரும் சுமை நிறைந்த அச்சுப் பணிக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. நான் படுக்கையே தஞ்சமாகிய நிலையில் வழமையாக எனது நூல்களை அச்சுவாகனம் ஏற்றும் திரு.கிருஸ்ணாவிடமே அச்சுப்பணியை ஒப்படைக்கப் பால யாழ்கோவனுக்கு ஆலோசனை வழங்கினேன். நூலைக் கட்டமைத்த பின்னர் கிருஸ்ணாவின் அச்சகத்தில் அச்சுப் பதிப்பதைப் பால யாழ்கோவன் விரும்பவில்லை. கிருஸ்ணாவிடம் டிஜிரல் வசதியோ நூலோடி கட்டும் வசதியோ இல்லை. அதனால் எனக்குச் சொல்லாமலே கிருஸ்ணா மூலம் பிரபலமான ஒரு வெள்ளையரின் அச்சகத்திடம் அச்சேற்றும் பணியை ஒப்படைத்தார். இன்னும், நான் மெலிந்த கடதாசி அட்டை மற்றும் பசையால் ஒட்டும் நூலுக்கே திட்டமிட்டிருந்தேன். அவர் எனக்குச் சொல்லாமலே தடித்த அட்டை – நூலோடிக் கட்டுதலை செய்வித்து முடிந்த பின்னர் எனக்கு அறியத்

பத்தாயிரம் டொலருக்குள் நூல் அச்சு வேலை முடியும் என்று எதிர்பார்த்தேன். தடித்த அட்டை - நூலோடிக் கட்டுதல், தரமான தாள், டிஜிரல் பதிவு காரணமாக எதிர் பார்த்ததற்கு மாறாக இரண்டு மடங்கிற்கு மேல் செலவுசென்றது. அச்சுவேலை முடிந்த பின்னர், கனடா தவிர்ந்த ஏனைய பழைய மாணவர் சங்கங்களுக்கு நூல்களை அனுப்ப வேண்டியிருந்தது. பால யாழ்கோவன் பல விசாரணைகளின் பின்னர் விமான மூலம் பொதிகளை அனுப்பினார். வேறு தனியாரிடமோ அல்லது பழைய மாணவர் சங்கங்களிடமோ நிதி உதவி கோர விரும்பவில்லை. அது மிகச் சிரமமான பணி. காலத்தைத் தின்றுவிடும். ஆகவே யாரிடமும் நிதி உதவி கோராது – யூனியன் கல்லூரி மாணவருக்கான அறக்கட்டளைத் தரும செயல் காரணமாக – குடும்பத்திற்குள்ளேயே அதை நிறைவேற்றத் தீர்மானித்தோம்.

**இதயத்தில் வாழும் ஞாபக சின்னங்கள்**



மனிதன் தனது சாதனைகளை மீட்டல் செய்வது இயல்பில் அமைந்த பண்பு. நான் மட்டும் விதிவிலக்கல்ல. எனது நிர்வாக காலத்தில் யூனியன் வளாகத்தில் தோற்றம் கண்ட – என்றும் அருள்பாலிக்கும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் திருக்கோவில், அதன் முகப்பில் அமைந்த தண்ணீர்த் தாங்கி, நிரையாக நின்றாடும் உயர்ந்த பச்சைப்பசேல் அசோகா விருச்சங்கள் (நெட்டிலிங்கம்), ஓவென்ற வெளியை நோக்கும் திறந்தவெளி அரங்கம், நெடுஞ்சாலை ஒரம்



அமைந்த இருமாடிக் கட்டிடம் - இவை உள்நாட்டுப் போரின் பேரழிவுகளுக்குள் மாண்டு மடியாமல் இன்றும் உயிர் வாழ்கின்ற காட்சிகள் எனது இதயத்தில் பால் வார்க்கின்றன. எனது நிர்வாக கால நாளாந்த காட்சிகள் - பாடாசலை முடிவடைந்ததும் வெண் சீருடையில் மாணவர்கள் வீடு விரையும் காட்சிகள், பாட-சாலை வகுப்பு நேரத்தில் கல்லூரி வளாகத்தில் குருவியும் பறவாத அமைதியான நிசப்தமான சூழ்நிலை, மாலை வேளையில் மெல்லென வீசும் தென்றலின் இனிமை, - போன்றவை மனத்திரையில் அடிக.கடி மிதந்து


யூனியன் வாழ்வை சதா நினைவூட்டின. யூனியன் சேவையிலிருந்து ஒய்வுபெற்று மூன்று தசாப்தங்கள் நிறைவு கண்ட இவ்வேளையில், மீட்டல் செய்யும் என் இயல்பு, தங்கத் தாரகையின் இராஜகம்பீர எழுகைக்கு ஓயாத உற்சாகம் தந்துள்ளதைக் காண்கின்றேன்.

**அமெரிக்க மிசன் ஊழியர் தியாகம்**

எனது 15 ஆண்டுகால யூனியன் வாழ்க்கையின் வேளை, சிலோன் அமெ-ரிக்கன் மிசன் ஊழியர்களின் - குறிப்பாக யூனியனை கட்டிக் காத்து வளர்த்த ஊழியர்களின் - உன்னத தியாகங்களை வாசித்து அறியும் வாய்ப்புக் கிட்டியது. அவர்கள் பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்தவர்கள். கலாநிதிகளும் அடங்கும். அவர்களுள் பலர் உயர் குடியைச் சேர்ந்தவர்கள். உத்தமமான வாழ்க்கையை மேற்கொண்ட கனவான்கள். மிக இளம் வயதிலேயே திருமணம் முடித்த கையோடு மதம் பரப்பும் புனித சேவைக்காகத் தங்களை அர்ப்பணித்து கப்பலேறி அலைகடல் தாண்டி சிலோன் வந்தவர்கள். அவர்களை வழிநடத்திய அமெரிக்க அரச அமைச்சு அவர்களது வாழ்க்கைக்கு மட்டுமட்டான நிதி உதவியே வழங்கியது. பாட-சாலையின் சிறு திருத்த வேலைக்கும், தளபாடம் வாங்குவதற்கும், விடுதியில் சேரும் ஒவ்வொரு மாணவனுக்கும் - காரணம் காட்டி விண்ணப்பித்து நிதி உதவி பெற வேண்டியிருந்தது. அத்தோடு, தாய் நாட்டில் உள்ள தனிப்பட்டவரின் தரும உதவியையும் நாடவேண்டியிருந்தது.



ஒத்துவராத வெப்பக் காலநிலை, தொடர்ந்து வந்து உருக்குலைத்த மலேரியா மற்றும் நோய்கள், எல்லாவற்றுக்கும் மேலாகக் காலத்துக்குக் காலம் வந்து போன வாந்தபேதி நோய், குலைகுலையாய் மக்களை அள்ளிக்கொண்டு போனவேளை, அமெரிக்க மிசனைச் சேர்ந்தவர்களுக்கு விதிவிலக்கு வைக்கவில்லை. யூனியன் வளாகத்தில் கால் பதித்து ஐந்து ஆண்டுகள் நிறைவுபெற முன்னரே வண. டானியல் பூஅர் அவர்-களின் மனையாள் அழகிய இளம் சூசானை நோய் சாய்த்துக்கொண்டு போனது — 1821. அவரது கல்லறையை தேவாலயத்துக்கு மேற்குப் பக்கமாக அமைந்துள்ள சதுக்கத்தில்



இப்பொழுதும் காணலாம். மற்றும் எட்வாட் வரன், ஜேம்ஸ் றிச்சாட் என்போரும் நோய்க்குப் பலியாயினர். வண. டானியல் பூஅர்கூட இறுதியில் 1855ஆம் ஆண்டு சதுராடிய வாந்திபேதி நோய்க்கு இரையானர்.

இத்தனை துன்பங்கள் துயரங்கள் மரணங்களுக்கு மத்தியிலும், அவர்கள் செல்வங்கொழிக்கும் தமது குபேர பூமியான தாயகத்துக்கு ஓடித்தப்பவில்லை. தமது சமயப் பணியையும் சமூகப் பணியையும் தொடர்ந்து மேற்கொண்டவாறு கடைசிவரை யாழ் மண்ணில் தங்கியிருந்து யாழ் மண்ணுள் மறைந்தார்கள். அவர்களது ஒப்பற்ற தியாகம் மனித குலத்துக்கு மேன்மைகள் நிறைந்த புனிதமான போதனைகள் பல செய்வதைப் பயபக்தியோடு பார்க்கின்றேன். அவர்களின் தூய்மையான தெய்வீக தியாகத்தைப் பதிவில் பாதுகாக்கவும் தங்கத் தாரகை கைதந்துள்ளது.

### உடனடித் தூண்டுதற் காரணி

உலகளாவிய அளவில் நான்கு கண்டங்களில் யூனியன் மாதாவின் 200 ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள் பழைய மாணவர் சங்கங்களால் அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டன. இன்னுமொரு முறை பூமிப் பந்தெங்கும் நூற்றாண்டு இறுதியில் விழாக்கள் இடம்பெறும் என்று கூறுவதற்கில்லை. இப்பொழுதே புலம் பெயர்ந்தவர்கள் வாழும் நாடுகளின் இரண்டாம் தலைமுறையினர் பழைய மாணவர் சங்கச் செயற்பாடுகளில் அக்கறை காட்டுவதில்லை. எதிர் காலத்தில்? ஆகவே 200 ஆண்டு நிறைவில் உலகம் பரந்தளவில் இடம்பெற்ற விழாக்களின் வரலாறு மங்கி மறைந்து போகாமல் பாதுகாக்க அவற்றின் வரலாறு பதிவில் இருக்கவேண்டும் என்ற அவாவே உடனடித் தூண்டுதற் காரணியாக இருந்தது. உலகின் எட்டு மையங்களில் நடந்த 200 ஆண்டுக் கொண்டாட்டங்கள் 'தங்க தாரகையில்' விசேடமாக அமைந்த இரண்டாம் பாகத்தில் விரிவாகப் பதிவாகியுள்ளன.

## நன்றி

*இறுதியில் ஒரு செய்தி கூற விரும்புகின்றேன். 'தங்கத் தாரகை' வரலாற்று நூலை வெளியீடு செய்து, சேகரிக்கும் அன்பளிப்பை – யூனியன் கல்லூரி அதிபர் குழுவால் நிர்வகிக்கப்படும் யூனியன் கல்லூரி மாணவர்களுக்கான 'கதிர் பாலசுந்தரம் அறக்கட்டளை' வங்கி நிதியத்தில் சேர்க்க முன்வந்த சகல பழைய மாணவர் சங்கங்களுக்கும் இவ்வேளை இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.*

*கதிர் பாலசுந்தரம்*

*****



# "தங்கத்தாரகை"

## இலங்கை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் 200 ஆண்டு கால வரலாறு!

## சுதந்திரத்திற்கு முந்திய காலத்தையும் நீடித்த போர்க்காலத்தையும் சித்திரித்திருக்கும் ஆவணம்

*முருகபூபதி - அவுஸ்திரேலியா*

கல்லிலிருந்து கணினி வரைக்கும் பாய்ந்திருக்கும் மொழிகளில் தமிழ் தொன்மையானது. இந்தத்தொன்மையிலிருந்து உருவான பழந்தமிழ் இலக்கியம், நவீன தமிழ் இலக்கியம், என்பவற்றின் ஊடாக தமிழ் ஊடகத்துறையின் வளர்ச்சியில் தமிழர்களின் வேட்கையையும் புரிந்துகொள்ள முடிகிறது.

ஆசியாக்கண்டத்திலேயே முதல் முதலில் தோன்றிய இருபாலாரும் கல்வி என்னும் செல்வத்தை பெற்றுக்கொள்வதற்காகவும் தமிழ் சமுதாயம் அறிவார்ந்த தளத்தில் நடப்பதற்கு வெளிச்சம் வழங்கிய கலங்கரை விளக்கமாகவும் திகழ்ந்த இலங்கையின் வடபுலத்தின் தெல்லிப்பழையில் தோன்றிய யூனியன் கல்லூரியின் வரலாற்று ஆவணம் தங்கத்தாரகை எம்மவரின் வாழ்க்கைப்பயணத்தில் ஒரு முக்கியமான மைல்கல்லாகவே அமைந்துள்ளது.

மைல் கல் எனக்குறிப்பிடுவதற்கும் ஒரு முக்கிய காரணம் இருக்கிறது. இதனையும் நாம் கடந்துசெல்லவேண்டும். மற்றும் சில மைல்கற்களை கடக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது. "எல்லாம் கடந்துபோகும்" என்பது வாழ்வின் தத்துவம்.

கடந்த அரைநூற்றாண்டு காலமாக படைப்பிலக்கியம், ஊடகம், சமூகப்பணி முதலான மூன்று தளங்களில் இயங்கிவருவதனால் இந்த மூன்று தளத்திலும் நின்றுதான் இந்த ஆவணத்தை அவதானிக்கின்றேன்.

**இரண்டு நூற்றாண்டுகளையும் கடந்து இயங்கிக்கொண்டிருக்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை இதுவரையில் நான் பார்க்கவில்லை. அதற்கான சந்தர்ப்பமும் இதுவரையில் எனக்கு கிட்டவில்லை. அதே பிரதேசத்திலிருக்கும் மகாஜனாக்கல்லூரிக்கும் ஒரே ஒரு தடவைதான் சென்றுள்ளேன். அங்கு பணியாற்றிய எழுத்தாளர் கோகிலா மகேந்திரனின் முரண்பாடுகளின் அறுவடை நூலின் வெளியீட்டுவிழா 1984 இல் அங்கு அதிபர் த. சண்முகசுந்தரம் தலைமையில் நடந்தபோது உரையாற்றச்சென்றேன்.**

**இந்தக்கல்லூரிக்களுக்கும் எனக்கும் இருந்த மற்றும் ஒரு தொடர்பு நாம் அவுஸ்திரேலியாவிலிருந்து மூன்று தசாப்த காலத்துக்கும் மேலாக இயக்கும் இலங்கை மாணவர் கல்விநிதியத்தின் ஊடாக இக்கல்லூரிகளில் பயின்ற சில மாணவர்களுக்கும் உதவியிருக்கின்றோம்.**

**இந்த இரண்டு கல்லூரிகளுடனும் எனக்குள்ள மற்றும் ஒரு முக்கியமான உறவு: இங்கு பயின்றவர்கள், இங்கு அதிபர்களாக, ஆசிரியர்களாக இருந்த பலர் எனது நீண்ட கால இலக்கிய நண்பர்கள். இன்றும் தொடர்பிலிருப்பவர்கள். இரண்டு கல்லூரிகளினதும் வரலாற்றில் நிகழ்ந்திருக்கும் சுவாரஸ்யமான நிழல் யுத்தங்களையும் கேள்வி ஞானத்தில்** அறிந்துவைத்திருக்கின்றேன்.

இந்தப்பின்னணிகளுடன்தான் எனக்கு கிடைத்திருக்கும் **தங்கத்தாரகை** பற்றிய எனது ரஸனைக்குறிப்புகளை பதிவுசெய்கின்றேன். எமது தமிழ் மக்கள் சந்தித்த ஐந்து காலகட்டங்களையும் இந்த ஆவணம் பேசுகிறது. சுதந்திரத்திற்கு முன்னரும் அதற்கு பின்னர் வந்த காலமும், போர்க்காலமும், **அதற்குப்பிற்பட்ட சமகாலமும், மக்கள் அந்நியம் புலம் பெயர்ந்த காலமும் அதன் பின்னர் தொடரும் காலமும் சித்திரிக்கப்படுகிறது. 425** பங்கங்களில் **இக்காலங்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன.**

**வரலாற்று ரீதியில் அவற்றை ஆவணப்படுத்தியுமிருக்கிறது. இதனைத்தொகுத்திருக்கும் பாரிய பணியை மேற்கொண்டிருப்பவர் யூனியன் கல்லூரியின் முன்னாள் அதிபர், எழுத்தாளர், ஆய்வாளர், அரசியல் பிரக்ஞையுள்ளவர். 90 வயதிலும் அயராது இயங்கிக்கொண்டிருப்பவர். இதுவரையில் நான் நேரில் பார்த்திருக்காத பேசியுமிருக்காத மின்னஞ்சலில் மாத்திரம் தொடர்பில் இருக்கும் நண்பர், மதிப்பிற்குரிய கதிர். பாலசுந்தரம்** அவர்கள். அவரது படைப்பிலக்கியங்களின் வரிசையில் எழுதியிருக்கும் நாவல்கள், தமிழ் அரசியல் தலைவர்களின் வரிசையில் எழுதியிருக்கும் நூல்களையும் ஏற்கனவே படித்திருக்கின்றேன். சிலவற்றைப்பற்றி எனது அவதானக்குறிப்புகளும் எழுதியிருக்கின்றேன்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு அமெரிக்க வெள்ளை இன அதிபர்களுக்குப்பின்னர் அதிபராக பதவியேற்றவர் ஐ.பி.துரைரத்தினம் எனவும், அதன்பின்னர் நான்காவது அதிபராக வந்தவர் திரு. கதிர்.பாலசுந்தரம் எனவும் அறிந்துள்ளேன். இவர் யாழ் குடாநாட்டிலிருந்து முன்னர் வெளியான 'Saturday Review' ஆங்கிலவார இதழின் ஆசிரிய தலையங்கத்தில் யாழ் குடாநாட்டின் அதிசிறந்த கல்லூரி அதிபர் என வர்ணிக்கப்பட்டவர்.

கல்விப்பணியுடன் கலை, இலக்கியப்பணியும் இவரது ஏனைய பக்கங்கள்.

**கதிர். பாலசுந்தரம் அவர்களின் எழுத்துக்கள் எப்போதும் - அது நாவலாக இருந்தாலென்ன, வாழ்க்கைச்சரிதமாயிருந்தால் என்ன அனைத்திலும் தேடலும் தெளிவும், சுவாரஸ்யங்களும், அங்கதமும் வெளிப்பட்டிருக்கும்.**

தங்கத்தாரகையில் இடம்பெற்றிருக்கும் ஏனையவர்களின் ஆக்கங்களை தவிர்த்துவிட்டுப்பார்த்தால், கதிர். பாலசுந்தரம் அவர்களின் தேடலின் ஆழம், அதில் இழையோடும் தேசத்தின் வரலாறு,

**அதற்குள்ளும் இழையோடும் பல கதைகள், அவற்றிலும் இழையோடும் செய்திகள், சுவாரஸ்யங்கள், அவற்றுக்குள் இழையோடும் அங்கதம் என அனைத்துமே இந்த ஆவணத்திற்கு மெருகூட்டுகின்றன.**

**இலங்கையில் முதலில் தோன்றிய உதயதாரகை** என்ற தமிழ்ப்பத்திரிகையின் அறிமுகத்திற்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வளாகம் அமைந்த இடம்தான் காரணம். ஈழத்தில் அச்சு எழுத்தில் வெளிவந்த முதலாவது தமிழ்ப்பத்திரிகை 'உதயதாரகை'. 1841 இல் இருந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வளாகத்திலிருந்து தொடர்ந்து வெளிவந்தது. தமிழிலும் ஆங்கிலத்திலும் (Morning Star) வெளிவந்த இருமொழிப்பத்திரிகை. இந்தத்தகவல்களும் தங்கத்தாரகையில் இடம்பெற்றுள்ளன.

**யூனியன் கல்லூரி வளாகம் அக்காலப்பகுதியில் ஒன்று இரண்டு அல்ல பல முட்கிரீடங்களை சுமந்துகொண்டே ஊருக்கும், மக்களுக்கும், மாணவர் சமுதாயத்திற்கும் பணியாற்றியுள்ளது என்ற வரலாற்று உண்மையையும் தங்கத்தாரகை சொல்கிறது.**

**இந்த ஆவணத்தில் முதலாவது அங்கமாக " கட்டியக்காரன் பேசுகிறேன்"** என்ற தலைப்பில் பதிவாகியிருக்கும் கட்டுரை எனக்கு மிகவும் நெருக்கமாகவே இருக்கிறது. அதனால் இந்த ஆவணத்துடன் எளிதாக நுழைந்துகொள்ள முடிந்தது. அவ்வாறு ஒரு பெரிய ஆவணம் வாசகரை கவர்வதாயின் அதன் தொடக்கம் மிக முக்கியமானது.

**கூத்து என்ற கலை வடிவத்தில் முதலில் தோன்றுபவர்தான் கட்டியக்காரன். இந்த நூலின் கட்டியக்காரன் இலங்கைக்கு 60 சதவீதமான அந்நியசெலாவணியை ஈட்டுத்தந்த பசுமை படர்ந்த மலையகத்தின் தேயிலைத்தோட்டங்களிலிருந்து கரிக்கோச்சியில் தெல்லிப்பழை நோக்கி புறப்படுகிறார். அந்த முதல் அங்கத்திற்கு அணிசேர்க்கும் வகையில் கல்லூரிக்கீதம். யார் இயற்றியிருக்கிறார்கள் எனப்பார்த்தால், அவரும் ஒரு இலக்கியவாதி!**

**யூனியன் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் கவிஞர் அம்பிகை பாகர்.**

**தீர்க்கதரிசி என்ற தலைப்பில், 16 ஆம் பக்கத்திலிருக்கும் சிறிய குறிப்பு இங்கு மிக முக்கியமானது.**

***" கொழும்பிலிருந்து யாழ். குடாநாடு வந்த டானியல் பூ அர், யாழ் நகரில் சில நாட்கள் தங்கிநின்று, நான்கு ஆண்டுகளுக்கு முன்னரே வந்து வாடிபோட்டிருந்த கிறீத்துவ சமயம் பரப்பும் மெதடிஸ்த மிசனைச்சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடி, அவர்கள் சமயம் பரப்பும் எத்தனத்தில் தோல்வியைத்தழுவிய வெப்பிராயத்தில் வாழ்வதை அவதானித்தார். அந்த, மெதடிஸ்த சபையார்களின் கசப்பான அனுபவமே, டானியல் பூ அர் பாடசாலைகள் அமைத்து ஆங்கிலக்கல்வி வழியாக யாழ்.குடிமக்களை சமயம் மாற்ற, புதிய மாற்றுவழியை மேற்கொள்ளக்காரணம். அவர் மக்கள் ஆங்கிலம் கற்று, சிறியளவில் பொருளியல் லாபம் பெறுவர். அதனால் தூண்டப்பட்டுத் தமது சமயத்தில் சேருவர் என்று எதிர்பார்த்தார். அவரது சிறியளவு எதிர்பார்ப்புகள், யாழ். மண்ணில் பூதாகரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை."***

**அந்த விளைவுகள் எவ்வாறு படிப்படியாக சமூகமாற்றங்களை உருவாக்கின என்பதையும் தங்கத்தாரகை சொல்கிறது.**

இதில் வரும் **வாடிபோட்டிருந்த** என்ற சொற்பிரயோகத்தை முகாமிட்டிருந்த எனவும் சொல்லமுடியும். ஆனால், கதிர் பாலசுப்பிரமணியம் அவர்கள் இயல்பிலேயே ஒரு கதை சொல்லி என்பதால், யாழ்ப்பாணப்பேச்சு வழக்கில் பல சொற்களையும் இந்த ஆவணத்தில் ஆங்காங்கே தூவியிருக்கிறார். பூதாகரம் - வெப்பிராயம் - சகபாடிகள் - அக்கப்பாடு பட்டனர் - சுக்கானைப்பிடித்தல் - உது புளிக்கும் . இவ்வாறு பல சொற்பிரயோகங்கள். படைப்பிலக்கியத்தில் பிரதேச மொழிவழக்கும் இடம்பெறும். அந்த மொழிவழக்குகள்

**யதார்த்த இலக்கியப்படைப்புகளில் மேலோங்கியிருக்கும். ஒரு பிரதேச மொழிவழக்கு மற்றுமோர் பிரதேசத்திற்கு அந்நியமானது. உதாரணமாக படலை** என்ற சொல். இதனை தமிழக வாசகர்கள் புரிந்துகொள்ளமாட்டார்கள். எங்கள் ஊரிலும் இந்தச்சொல் வழக்கில் இல்லை.

**ஆனால், வாடிபோட்டிருந்த** சொல் எமது ஊரில் புழக்கத்திலிருக்கிறது. எங்கள் ஊர் மீனவர்கள் கடற்கரையோரங்களில் குடிசைகள் அமைத்து தமது கடற்றொழிலை விருத்தி செய்வர். வெளியூர் சென்றும் கடற்கரையோரங்களில் அவ்வாறு வாடிபோடுவர். தற்போது இலங்கையில் வடமராட்சி கடலோரத்தில் தென்னிலங்கை மீனவர்கள் அவ்வாறு அத்துமீறி வாடிபோட்டு தொழில் செய்வது இன்று அரசியலாகியிருக்கிறது.

200 வருடங்களின் முன்னர், அமெரிக்க பாதிரிமார் வந்து வாடிபோட்டனர். ஆனால், அது அன்று அத்துமீறலாகப் பார்க்கப்படவில்லை. சுதந்திரத்திற்கு முற்பட்ட காலம்! அதன் பின்னர் ஏற்பட்ட மாற்றங்களையும் மறுமலர்ச்சிகளையும் ஆண்டு வாரியாக ஆதாரங்களுடன் இந்த நூல் பேசுகிறது.

**அந்த மறுமலர்ச்சி காலத்தில் நுட்பமான காரியங்களும் நடந்தேறியிருக்கின்றன. டானியல் பூ ஆர்** என்ற அந்த அமெரிக்க பாதிரியார் பாடசாலையை ஆரம்பித்தபோது முதலில் சேர்ந்தவர்கள் ஆறு பிள்ளைகள்தான் அதில் ஐந்துபேர் பெண்கள்! அதில் ஒரு பெண் **மிராண்டா செல்லத்துரை.** அவரை நூலாசிரியர் இவ்வாறு குறிப்பிடுகிறார்: "**வளம் வாய்க்கப்பெறாத மாணவி** " அக்காலத்திலிருந்த சமூக அமைப்பின் ஏற்றதாழ்வு இந்த வரிகளில் துலக்கமாகிறது.

அமெரிக்காவிலிருந்து இலங்கை வந்திருக்கும் பாதிரிமாருக்கு இருந்த நோக்கம் நாங்கள் அனைவரும் அறிந்ததே! அந்த நோக்கத்திலிருந்து வடக்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மறுமலர்ச்சிகள் பற்றி பேசுகிறது இந்த ஆவணம். பாடசாலை தொடங்கிய காலத்தில் அங்கு புழக்கத்திலிருந்த நாணயம் அரைச்சல்லியும், துட்டும்தான்.

ஒரு காலத்தில் எமது முன்னோர்கள் சொல்லும் வசனம் அறிவீர்கள்: **துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு!** இன்று நாம் வெளிநாட்டில் நாணயத்தை டொலர் என்கின்றோம்.

ஆறு மாணவர்களுடன் தொடங்கிய பாடசாலை ஐந்து ஆண்டுகளில் 1821 இல் 14பேருடன் வளர்ச்சி அடைகிறது. அரைச்சல்லியும் துட்டும் மறைந்து ரூபாய் தாள் அறிமுகமாகிறது. மணிஓடர் பொருளாதாரம் மக்களிடம் வருகிறது. இதற்கெல்லாம் வித்திட்டிருக்கிறார் பாதிரியார் டானியல் பூ அர். அவரது பயணங்கள் அவருடன் இணைந்துவந்தவர்கள் எதிர்நோக்கிய சிரமங்கள், சந்தித்த நோய் உபாதைகள் மரணங்கள், தியாகங்கள் அவற்றுக்குள்ளும் இழையோடிய சுவாரஸ்யமான கதைகள் இந்நூலில் இடம்பெறுகின்றன.

டானியல் பூ அர் முதலில் ஆங்கிலத்தில் கற்பித்துவிட்டு பின்னர் அவரும் தமிழ் கற்கிறார். மொழிபெயர்க்கிறார். இதற்கிடையில் பரிசுத்த வேதாகமம் தமிழில் மொழிபெயர்க்கப்படுகிறது. **யாழ்ப்பாணத்தில் சைவசமயத்திற்கு தொண்டாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் வேதாகமத்தை தமிழில் மொழிபெயர்த்துள்ளார். ( அவரது காலம் 1822-1879)** யூனியன் கல்லூரிக்கு **பெஞ்சமின் சி.மாய்க்ஸ்** என்பவரும் அதிபராக வருகிறார். அவர் பற்றிய ஒரு சுவாரஸ்யமான கதை: அவர் பயணிப்பது ஒரு மட்டக்குதிரையில் அது நோய்வந்து இறக்கிறது. அதன்பின்னர் மற்றும் ஒரு மட்டக்குதிரையை வாங்குகிறார். அதிலும் பயணிக்கிறார். அதுவும் நோயுற்று இறக்கிறது.

அவ்வாறு குதிரைகளில் பயணம் செய்வதற்கு முன்னர் அவர் பல்லக்கில்தான் சென்று வந்திருக்கிறார். பல்லக்கு பற்றி உங்களுக்குத் தெரியும். அதனை சிவிகை எனவும் அழைப்பர். பல்லக்கு சுமப்பவர்களுக்கு கூலி கொடுத்திருக்கிறார். அவ்வாறு அவர்களுக்கு கூலி கொடுப்பதைவிட ஒரு மட்டக்குதிரை வாங்கி பயணிக்கலாம் என்ற முடிவுக்கு பெஞ்சமின் சி. மாய்க்ஸ் வருகிறார். ஏன் தெரியுமா..? குதிரைக்கு கூலி கொடுக்கத்தேவையில்லை. வேளாவேளைக்கு கொள்ளும்

புல்லும் போட்டால் போதும். இதனை அவதானித்த பல்லக்குத் தூக்கிகள் என்ன செய்திருக்கிறார்கள் தெரியுமா..?

அந்த மட்டக்குதிரைகளுக்கு அவருக்குத்தெரியாமல் விஷம் வைத்திருக்கிறார்கள். ஏன் தனது குதிரைகள் அடுத்தடுத்து இறக்கின்றன? என்று ஒரு மிருக வைத்தியரிடம் சென்று விசாரிக்கிறார். இறந்த குதிரைகளை பரிசோதித்தித்தபோது உண்மை தெரியவருகிறது!

அவற்றுக்கு நஞ்சுவைத்தவர்கள் அந்த பல்லக்குத்தூக்கிகள். எப்படி இருக்கிறது அந்தக்கதை! பல சமகாலச்செய்திகளுடன் அக்காலச்செய்திகளை ஒப்புநோக்குவதற்கும் யூனியன் கல்லூரியின் வரலாறு கதவுகளை திறக்கிறது.

அன்று வாழ்ந்த மக்களின் பொருளாதாரம் தோட்டத்தையும் வயல்வெளிகளையும் நம்பியிருந்தது, பின்னர் எவ்வாறு மாறியது என்பதையும் இந்த நூல் பல அரிய தகவல்களுடன் எடுத்துரைக்கிறது.

யூனியன் கல்லூரியில் ஆங்கிலத்தில் படித்த பலர் இங்கிலாந்து பரீட்சைகளுக்கும் தோற்றுகின்றனர். தென்னிலங்கைகக்கும் சிங்கப்பூர், மலேசியாவுக்கும் செல்கின்றனர். இன்றும் சிங்கப்பூர் - மலேசிய பென்ஷனியர்கள் என்ற ஒரு சமூகம் எமது மத்தியில் வாழ்வதை அறிவோம்.

இவ்வாறு வடமாகாண தமிழ் சமூகத்தில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமய, கலாசார மாற்றங்களை இந்த நூல் சம்பவங்கள் ஊடாக பதிந்துசெல்கிறது.

இதற்கிடையில் உதயதாரகையின் தோற்றம் பற்றியும் இந்நூல் சொல்கிறது.

விடியல் - உதயம் முதலான சொற்பதங்கள் இயற்கையுடன் சம்பந்தப்பட்டிருந்தாலும் மனிதவாழ்வு மீதான நம்பிக்கையையும் சார்ந்திருக்கிறது.
உதயதாரகைக்குப்பின்னர், ஈழகேசரி, ஈழநாடு, **ஈழநாதம், ஈழமுரசு, முரசொலி என்பன வந்து மறைந்தன.**

**சமகாலத்தில் அங்கிருந்து வெளியாகும் உதயன் - வலம்புரி - யாழ். தினக்குரல் - காலைக்கதிர் - எதிரொலி** ஆகியனவற்றுக்கும் அன்று பல தசாப்தங்களுக்கு முன்னர் அச்சு ஊடகமாக வெளியான உதயதாரகைக்கும் இடையே பாரிய வித்தியாசங்கள் இருக்கின்றன!

**நாம் தற்போது மின்னூடகங்களின் காலத்தில் வாழ்கின்றோம். இணையத்தளங்கள், வலைப்பூக்கள் பெருகிவிட்டன. கையிலிருக்கும் கைத்தொலைபேசி ஊடாகவும் உடனுக்குடன் உலகச்செய்திகளை பார்க்கின்றோம்.**

## உள்நாட்டுப்போரின் தரிசனம்

இந்த அங்கம் நூலின் 19 ஆவது அத்தியாயத்தில் தொடங்குகிறது. இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை பாரிய நெருக்கடியாகும் காலம் யாழ்ப்பாணம் மேயர் அல்பிரட் துரையப்பாவின் கொலை, மற்றும் உரும்பராய் சிவகுமாரனின் தற்கொடை மரணத்துடன் தொடங்குகிறது என்பதுதான் வரலாற்று ஆசிரியர்களின் கூற்று!

தெல்லிப்பழையில் **கட்டுவன்** பிரதேசம் அறிவீர்கள். இங்கிருந்து உமா மகேஸ்வரனும் காங்கேசன்துறையிலிருந்து பத்மநாபாவும், வல்வெட்டித்துறையிலிருந்து வேலுப்பிள்ளை பிரபாகரனும் ஏனைய வடபுல பிரதேசங்களிலிருந்து பாலகுமாரனும் தம்பாப்பிள்ளை மகேஸ்வரனும் இரத்தினசபாபதியும் தோன்றினர்.

மேலும் சில தலைவர்கள், தளபதிகள் வந்தனர். இவர்களின் அழைப்பிலும் வற்புறுத்தலிலும் பல மாணவர்களும் இவர்களின் இயக்கங்களில் இணைந்த கதைகளையும் அறிவோம். இறுதியில் இந்தத் தலைவர்களுக்கும் தளபதிகளுக்கும் நேர்ந்த கதை அறிவோம்.அவர்களும் இன்றில்லை. அவர்களை நம்பிச்சென்ற மாணவர்கள் பலரும் இன்றில்லை. கல்லூரிகள் இன்றும் இயங்குகின்றன.

யூனியன் கல்லூரியில் வகுப்புகள் நடக்கும் வேளைகளில் வரும் இயக்கத்தினர் பற்றியும் இந்த நூல் பேசுகிறது! ஆசிரியர்கள் பாடசாலைப்பாடம் நடத்தும் நேரத்தில் இயக்கத்தினர் வந்து தங்கள் பாடம் எடுத்த கதையும் வருகிறது.

கண்ணி வெடிகளில் கவச வாகனங்கள் சிக்கினால் என்ன நடக்கும்? ஆயுதப்படையினர் மட்டுமா கொல்லப்படுவர். உடனே அங்கு வரும் படையினர் கண்மூடித்தனமாக சுடுவார்கள். அப்பாவி மக்களும் கொல்லப்படுவர். தேடுதல் வேட்டை தொடங்கும். மாணவர்கள் கைதாவர். தடுத்துவைக்கப்படுவர். காணாமல் போவர்!

அக்காலகட்டத்தில் இருதலைக்கொள்ளி எறும்புகளாக - பாக்குவெட்டிக்குள் அகப்பட்ட பாக்குகளாக அதிபர்கள் - ஆசிரியர் பட்ட அவஸ்தைகளையும் இந்த நூலில் ஒரு செய்தியாளனாக கதிர். பாலசுந்தரம் பதிவுசெய்துள்ளார். 191 முதல் 196 ஆம் பக்கம் வரையில் யூனியன் கல்லூரி வளாகத்திலும் அதனைச்சூழவுள்ள பிரதேசங்களிலும் நிகழ்ந்த சித்துவிளையாட்டுக்கள் பற்றிய அதிர்ச்சியான தகவல்களை பதிவுசெய்துள்ளார்.

யூனியன் கல்லூரியில் ஒரு ஆசிரியர். பெயர் பாலசுப்பிரமணியம். அவரது முழங்கைகள் இரண்டும் காய்ச்சியிருந்தன. எமது முஸ்லிம் சகோதரர்களின் நெற்றியில் நீங்கள் அவதானிக்கும் தழும்பின் பின்னால் அவர்களின் ஐந்து வேளை தொழுகையின் கதை இருப்பதுபோன்று பெரும்பாலான ஆசிரியர்களின் முழங்கைகளில் தோன்றியிருக்கும் தழும்புக்கும் ஒரு கதை இருக்கிறது.

அந்தக்கதை அந்த ஆசிரியர்கள் அமர்ந்து பாடம் நடத்தும் மேசைகளிலிருந்து தொடங்குகிறது. மேசையில் முழங்கைகளை ஊன்றி பாடம் நடத்துவதனால் வரும் தழும்புதான் அது.

ஒருநாள் விமானப்படையினர் யூனியன் கல்லூரியிலும் தேடுதல் நடத்துகிறார்கள். பாலசுப்பிரமணியம் ஆசிரியரின் முழங்கைகளை தடவிப்பார்க்கிறார்கள். அன்பினால் அல்ல!

அவரும் இயக்கத்தில் சேர்ந்து, பயிற்சிக்குப்போயிருக்கிறார் என்ற சந்தேகம் வருகிறது. முகாமுக்கு அழைத்துச்செல்லப்படுகிறார். தீவிர விசாரணை நடக்கிறது. கல்லூரியின் ஆசிரியர் வரவு இடப்பு பதிவேடு ஆராயப்படுகிறது. அதில் அந்த ஆசிரியர் கல்லூரிக்கு தினமும் காலையில் வந்து - மாலையில் வீடு திரும்பிய நேரம் தெரிகிறது. பின்னர் அவர் விடுவிக்கப்படுகிறார்.

எஸ்.பி. முத்துராமன் என்ற திரைப்பட இயக்குநரின் படம்தான் மயங்குகிறாள் ஒரு மாது. அதில் கவிஞர் கண்ணதாசன் ஒரு பாடல் இயற்றியிருப்பார்.

**" ஒரு புறம் வேடன் - ஒருபுறம் நாகம் - இரண்டுக்கும் நடுவே அழகிய கலைமான்!**

அன்றைய இனவிடுதலைப்போராட்டத்தின் கோலங்களை சித்திரிக்கும் உள்நாட்டுப்போரின் தரிசனம் என்ற அத்தியாயம் இவ்வாறு முடிகிறது:

" போராளி ஒருவன் வந்து, துப்பாக்கியை ஆட்டியபடி, " வா விசாரணை இருக்கு" என்றால், அதற்கு மறுபேச்சு இல்லை. ஆசிரியர் என்றால் என்ன அதிபரென்றால் என்ன? ஆண்டி என்றால் என்ன? எதிர்பேச்சு பேசாமல் போகவேண்டிய சூழ்நிலை." இறுதியில் இரண்டு சொற்களில் நச்சென்று முடிக்கிறார் கதிர். பாலசுந்தரம். அச்சொற்கள்: **" மௌனம் கைதந்தது"**


ஆம், உண்பதற்கும் கொட்டாவி விடுவதற்கும் மாத்திரம் வாய்திறந்த காலம் அல்லவா அந்தப்போர்க்காலம். எமது ஈழத்தமிழ் மக்களின் வரலாற்றின் பக்கங்களில் அழிக்கமுடியாத செய்திகளை **தங்கத்தாரகை** பதிவுசெய்துள்ளது.

அன்று இருநூறு வருடங்களின் முன்னர் இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பிருந்த நிலையை சொல்லும் இந்த ஆவணம், அதன் பின்னர் நேர்ந்த மாற்றங்களையும் போருக்குப்பின்னர் உருவான மாற்றங்களையும் சொல்கிறது.

இன்று நாம், ஈழத்தமிழர்கள் புலம் பெயர்ந்த பின்னர், அவர்களிடம் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் இவர்களால் ஈழத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள அரசியல், கல்வி, பொருளாதாரம், சமூக மாற்றங்களையும் அவதானிக்கின்றோம்.

சமூகத்திற்காக பேசுவதும் சமூகத்தைபேச வைப்பதுமே ஊடகவியலாளர்கள் படைப்பாளிகள், கல்விமான்களின் பிரதான பணி. அதனையே தங்கத்தாரகை ஊடாக கதிர். பாலசுந்தரம் அழகாகவும் நேர்த்தியாகவும் கனதியாகவும் செய்துள்ளார். அவருக்கும் இதனை வெளியிட்டிருக்கும் யூனியன் கல்லூரி பழையமாணவர் சங்கத்தினரும் பாராட்டப்படவேண்டியவர்கள்.

இந்தக் கட்டுரை அவுஸ்திரேலியா – மெல்போர்ணில் வசிக்கும் திரு லெட்சுமணன் முருகபூபதியால் எழுதப்பட்டு, 'தேனி' மின் அஞ்சல் பத்திரிகையில் வெள்வந்தது.
நன்றி: திரு லெ முருகபூபதி, 'தேனி'



# The Unions (UK)

# AGM

# (Annual General Meeting)

**@ 5p.m.**

**on**

**Saturday, 11th November 2018**

**@**

**Northolt Village Community Centre**

The Manor House, Ealing Road, Northolt

Middlesex UB5 6AD

# Register as a Member to Vote & Voice Your Ideas!

**Limited Parking available.**

***Nearest Underground:*** Northolt (Central line)

***Bus:*** E10, 90 120, 282

# என்றும் நாங்கள் .............

- இன்றைய விழா நடப்பதற்குக் காரணமான 'தங்கத் தாரகை' வரலாற்றுப் பொக்கிசத்தை எமக்குத் தந்த எமது யூனியன் அன்னையின் 'பொற்கால' அதிபர் திரு கதிர் பாலசுந்தரம் அவர்கட்கு
- இன்றைய விழாவிற்கு அனுசரணை செய்து உதவுகின்ற 'லைக்கா தொலைக்காட்சி' நிறுவனத்திற்கு
- இன்றைய வெளியீட்டு நிகழ்சியில் 'தங்கத் தாரகை' நூலினை

  அறிமுகம் செய்கின்ற அதிபரின் மாணவர் சட்த்தரணி திரு சிறிகாந்தலிங்கம்

  விமர்சனம் செய்கின்ற, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்னாள் விரிவுரையாளர் திரு மு நித்தியானந்தம்

  விமர்சனம் செய்கின்ற 'புதுசு', 'பனிமலர்' சஞ்சிகைகளின் முன்னாள் ஆசிரியர் திரு நா சபேசன் ஆகியோருக்கு
- கலை நிகழ்ச்சிகள் தந்த நண்பர்களுக்கு
- விழா மண்டபத்தினைத் தந்துதவிய லூயிசம் சிவன் நிலையத்தினருக்கு
- மலருக்கான இரண்டு ஆக்கங்களைத் தந்துதவிய அதிபர் திரு கதிர் பாலசுந்தரம், எழுத்தாளர் லெ முருகபூபதி ஆகியோருக்கு
- மலருக்கான விளம்பரங்களைத் தந்துதவிய வியாபார நிறுவனங்களின் நண்பர்களுக்கு
- முதற்பிரதியை வெளியிட வந்திருக்கும் எமது சங்கத்தின் முதற்தலைவர் அமரர் **VTS** மூர்த்தியின் துணைவியார் திருமதி ஜோ மூர்த்தி அவர்களுக்கு
- முதற்பிரதியையும், சிறப்புப் பிரதிகளையும் வாங்க வந்திருக்கும் அன்பர்களுக்கு
- மலரினை அச்சிட்டு வழங்கிய **Setline** அச்சக நண்பர்களுக்கு
- விழாவின் வெற்றிக்குப் பலவழிகளில் உதவிய நண்பர்களுக்கு
- எமது அழைப்பை ஏற்று இங்கே வருகைதந்து சிறப்பிக்கின்ற அனைவருக்கும்

**நன்றியுடையோம்!**

*யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கம்*
*ஐக்கிய இராச்சியம் 27. 10. 2018*

# CHELIAN LAW SOLICITORS

## A.F.Ilanchelian

## SOLICITOR

**Commissioners for Oaths**

# 24 Hour

## Crime & Immigration Service

# 07939 474 342

**Immigrations Related Applications and Appeals**

Immigration
EEA Law
Entry Clearance
Human Right claims
Asylum Claim
Citizenship and Nationality
Detention and Deportation
Judicial review

**Family Maters & Property**

| | |
|---|---|
| Divorce Maters | Residential |
| Ancillary Relief | Commercial |
| Other family maters | Landlord |

- Tier 1 (High skilled workers, Entrepreneurs, investors)
- Tier 1 (Post Study Work)
- Tier 2 (Sponsored skilled workers) (formely 'work permit')
- Tier 4 (Students)
- Tier 5 (Temporary Workers)

**NO WIN NO FEE**

Personal Injury
Road Traffic Accident
Slip and Trip
Work Related Accidents
Clinical Negligence

**Crime** ( Public Funding Available)

24 hour Police station representation,

Representation at Magistrate /Crown courts

PROPERTY - உடமைகள் • Residental Property • Commercial Property • Landlord and Tenang Matters

**10 PALMERSTON ROAD**
**HARROW, MIDDLESEX**
**HA3 7FA**
**Tel: 0207 139 8631**



"Ammanai Saran Addinthal Athika Varam Peralam"

**SRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

Founded on 10.08.1991 Charity No. 1014409

5 Chapel Road London W13 9AE,

Tel: 020 8810 0835/ 020 8840 0485

www.ammanealing.org Email: info@ammanealing.org

# தியான மண்டபம்



## அம்பிகைக்கு ஓர் மண்டபம் அமைத்திடுவோம் வாரீர் !

6000 சதுர அடியில் மூன்று தளங்களைக் கொண்டு அமையும் தியான மண்டபம் ஒவ்வொருவரும் இணைந்திட ஒரு சதுர அடிக்கு £180 பவுண்களே. அம்பிகையின் அருட்கடாட்சத்திற்கு ஆளாகுங்கள்.

கடந்த 14.07.2018 அன்று அழகுற அமையப் போகும் தியான மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற துர்க்கை அடியார்கள் அனைவரும் தங்களால் முடிந்த நன்கொடையை வழங்கி உதவுங்கள்!

சிறுதுளி பெரு வெள்ளம்

Please Extend your support to build our Meditation Hall
your Magnanimity will enable us to build
the Three Story 6000 Squate Feet Meditation Hall.
Sponsorship of £180 for a Square feet.

Bank Details: SKTA Temple Trust
LLOYDS Bank, Sort Code: 30-98-91| Account No: 02717646

**அன்னையின் பணியில் இணைந்திடுங்கள் அவள் அருளைப் பெற்றிடுங்கள்!**

*Please Donate as much as you can!*

## தமிழ்த் தாய்
## தன் மக்களைப் புதிய சாத்திரம் படைக்க வேண்டுதல்
(தாயுமானவர் ஆனந்தக்களிப்புச் சந்தம்)

இன்றொரு சொல்லினைக் கேட்டேன் - இனி
ஏது செய்வேன்? என தாருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை - இங்கு
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்!

புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே – அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

சொல்லவும் கூடு வதில்லை – அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்

என்றந்தப் பேதை உரைத்தான் -ஆ!
இந்த வசையெனக் கெய்திட லாமோ?
சென்றி டுவீர் எட்டுத்திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்


தந்தை அருள்வலி யாலும் - இன்று
சார்ந்த புலவர் தவவலி யாலும்
இந்தப் பெரும்பழி தீரும் புகழ்
ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்

*நன்றி: பாரதியார் பாடல்கள்*

*With compliments from*


**Ratna & Co Solicitors**

*169A High Street North*
*East Ham*
*London E6 1JB*
*Tel: 0208-470-8818*
*ratna@ratna.co.uk, www.ratna.co.uk*



நீங்கள் NHS பல் சிகிச்சைக்காக காத்திருக்க தேவையில்லை
NEEM
Emergency Dentistry
•Fast & Efficient Pain Relief
•Quick & Easy Appointments
•Affordable High Quality Care
01 Emergency Walk-in
02 Open Late Hours & WK Ends
03 Cosmetic Dentistry
04 General Dentitsry
Popular Services
QUALITY SERVICE RELIABILITY
Don't wait
ACT NOW!
Dental Emergency!
Stop the pain!
BOOK ONLINE
South Harrow வில் ஒரு தமிழ் பல்வைத்தியசாலை
உடனே அழையுங்கள்
T: 020 84 23 25 23
291 Northolt Road, South Harrow, HA2 8HX.
www.neemdentalclinic.co.uk


BIRUNTHA SOLICITORS
Solicitors & Administrations of oaths
LAW
Specialists In:
▪ Immigration and Asylum
* Asylum & Human Rights
(அரசியல் தஞ்சம், மனித உரிமைகள்)
▪ Family - -Divorce, Ancillary Relief and children matters
(விவாகரத்து மற்றும் சிறுவர் பராமரிப்பு)
▪ Crime
▪ Debt Recovery
(கடன் மீளப்பெறுவதற்கான ஆலோசனை)
▪ Power of Attorney
▪ Statutory Declaration
▪ Translation of Tamil and Sinhala Documents
(தமிழ் மற்றும் சிங்கள மொழியிலுள்ள ஆவணங்களின் மொழிபெயர்ப்பு)
▪ Sri Lankan affairs
20 Loampit Hill, Lewisham
London SE13 7SW
Tel : 020 8318 7177, Fax : 020 8852 3700


லூசியத்தில் முதலாவது தமிழ்க்கடை.....
கற்பகம்
தங்கள் சேவையை விரிவாக்கியுள்ளார்கள்
KATPAKAM
உடன் காய்கறிகள், பழ வகைகள், உடன் பங்கு இறைச்சி
தமிழ் ஆடியோ, வீடியோ தமிழ்படங்கள் அனைத்தும்
ஒரே இடத்தில்
36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
Tel : 208 694 88 10


SUN
MOTORS
TEL: 02086920232
Mechanical / Body Repairs /
Recovery / Tyres
R/O 26 LOAMPIT Hill
Elswick Road, Lewisham
London, SE13 7SW

# The Oval Premier

15 The Oval
Sidcup
KENT
DA15 9ER



# Station News Agents

393 Footscray Road
New Eltham
London
SE9 2DR



**Contact**

**Mr T Kiritharan**
**Tel : 07812078529**


Helping you
Save Energy
Good news for business owners
& residential customers
Save upto £300
on the RESIDENTIAL Energy Bills
Save upto £1000
on the COMMERCIAL Energy Bills
We can beat all the Big
6 Energy suppliers in UK
(British Gas, EDF, E-On, N-power,
Scottish Power, Southern Electric)
Fixed Price Energy Deal
Best dual fuel in UK
Ready to switch?
2 SIMPLE STEPS SWITCHING
ALL YOU NEED TO START SAVING ££££...
1 Your Post Code
2 Your latest bills
24/7 SMART ALARMS
FOR RESIDENTIAL OR BUSINESS
Protect your
Loved ones
& your
possessions
today
NOBODY IS IMMUNE FROM BURGLARY,
INSTALLING A
HOME/BUSINESS
SECURITY SYSTEM
OFFERS PROTECTION TO
BOTH FAMILY MEMBERS AND
BUSINESSES FROM INTRUDERS
Take full control of your security,
activate or deactivate
anywhere in the world
using your smart phone
FOR YOUR FREE DEMONSTRATION &
INTRODUCTORY OFFER FOR THIS MONTH
07930175031 - 07939 039 089


எவரஸ்ட்
Curry King
24 Loampit Hill
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233
அசத்தலான அசைவ சுவைக்கு
Breakfast Lunch Dinner

# RiverSure

Financial services

***Building Business on reputation is our goal***

## Need an Insurance?

Make sure you are covered adequately

We provide insurance for the following:

- ✓ Home Contents & Building Insurance
- ✓ Motor Insurance
- ✓ Shop and office Insurance
- ✓ Restaurant and Take away Insurance
- ✓ Charities Insurance
- ✓ Travel Insurance
- ✓ Event Insurance

---

## Need a mortgage?

Make sure it's the right one.



You've spent all that time finding the right home - surely you should spend some time finding the right mortgage. We can help you do just that. Your home may be repossessed if you do not keep up repayments on your mortgage.

A fee of 1% of loan amount with minimum fee payable of £895 with an outset payment £295 payable when you apply for a mortgage, and balance to be fully paid upon receipt of offer. we will also be paid commission from the lender.

Ratnam Uthayananthan
Director
**Riversure Ltd**, LG05, China House, 401 Edgware Road, London NW2 6GY
Tel: 02089058881 | Mob: 07956334347 | info@riversure.com

Lyca TV

உலகின் மிகப் பிரமாண்டமான தொலைக்காட்சி நிலையம்

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

ஒருவருட இணைப்புச் சந்தா

£89

புதுப்பித்தல்

£69

SET TOP BOX INCLUDED



50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்

விஜய் தமிழ் KTV

TENT KOTTA + SUN NXT

1000க்கும் அதிகமான தமிழ்த் திரைப்படங்கள்

4K / HD / 5.1 DOLBY தரத்தில் திரைப்படங்கள்

4000+ திரைப்படங்கள்





DOWNLOAD VIDEOS

Look for this symbol to Download TV episodes to watch on the go without using data

MOBILE & TABLET

App Store

Google Play

OFFLINE VIEWING FEATURES

நிகழ்ச்சிகளை DOWNLOAD செய்து, INTERNET இணைப்பின்றி உங்களுக்கு விரும்பிய நேரத்தில் பார்க்கும் வசதி

* Selected channels only

0207 132 2727

www.lycatv.tv